நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

சுடர் : 36 கதிர் : 197 | வெள்ளிக்கிழமை | வைகாசி 28 ஆம் நாள் 11 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## பிறந்து 8 நாள்களேயான சிசு கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 11

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நிமோனியாவால், பிறந்து 8 நாள்களேயான பச்சிளம் சிசுவொன்று உயிரிழந்துள்ளது. கொரோனாவால் இதுவரை உயிரிழந்தவர்களில் குறைந்த வயது உயிரிழப்பு இது எனத்

15

# பயணத் தடை 14 இல் நீக்கம்

### இராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை ஜூன் 14ஆம் திகதிக்கு பின்னர் நீடிப்பதற்கு இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

15

யாழ்ப்பாணத்துக்கு

## இம்மாத இறுதியில் இரண்டாவது 'டோஸ்'

யாழ்ப்பாணம், ஜூன் 11

தடுப்பூசி பகிர்ந்தளிக்கப்படாத மாவட்டங்களுக்கு அடுத்தடுத்த கட்டங்களில் கிடைக்கும் தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கப்படும். அதன் பின்னரே முன்னர் தடுப்பூசி வழங்கிய மாவட்டங்களுக்கு இரண்டாம் கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்படும். யாழ்ப்பாண

15

"பட்டினிச்சாவை பயணத்தடையை நீக்கி தவிர்க்கிறதெண்டது சரிதான்.. ஆனால் கொரோனாவால இனிமேல் சாவு வராதாமோ?"



முச்சந்தி முரளி

## பட்டினிச்சாவைத் தவிர்க்கவே பயணத் தடையில் தளர்வுகள்!

### மக்கள் பொறுப்புணர வேண்டும் சுகாதார அமைச்சர் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 11

'கொரோனாத் தொற்றையும் அதனால் ஏற்படும் சாவுகளையும் கட்டுப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், நாடு முடக்கத்தால் அன்றாடம் கூலி வேலைசெய்யும் மக்கள் எதிர்நோக்கும் பட்டினிச் சாவு தொடர்பிலும் முக்கிய கவனம்

15

## வடக்கில் 148 யாழில் 119

யாழ்ப்பாணம், ஜூன் 11

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 175 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 148 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 228 பேரின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 4 பேருக்குத் தொற்று உறுதியானது. நேற்றுப் பகல் 627 பேரின்

15

## கொரோனா நேற்று 2,738

கொழும்பு, ஜூன் 11

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 738 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தக

15

## தொழிலுக்குச் சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார்!

புதுக்குடியிருப்பு, ஜூன் 11

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் கிராமத்திலிருந்து நந்திக் கடலுக்கு தொழிலுக்காகச் சென்றவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டார். பச்சைப் புல்மோட்டை வயல்

15



யாழ்ப்பாணத்தில்

## பயணத் தடையை மீறின் கைதுசெய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணத்தில் பயணத் தடையை மீறி வீதிகளில் செல்பவர்களை கைதுசெய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திடீர் நடவடிக்கை யாழ். நகரம் உள்ளிட்ட

15

## மஸ்தானுக்கு கொரோனா!

மன்னார், ஜூன் 11

நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவைச் சந்திக்கச் சென்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் அன்டிஜென் சோதனை மேற்கொள்

15

## பொலிஸுக்கே மது விற்க முயன்றவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு மதுபானப் போத்தல்களை விற்க முற்பட்ட நபரொருவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். சுன்னாகத்தைச் சேர்ந்த அவர் ஆறுகால்மடம்

15

உதயன்
செய்திகளுக்கு
021 493 0000
077 1209994
விளம்பரங்களுக்கு
021 493 1111
071 6182182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியக் கொடுப்பனவு பெற வடக்கில் ராணுவத்தினர் உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 11

**பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கில் ஓய்வூதியம் பெறும் முதியவர்களை இராணுவத்தினர் வாகனங்களில் வங்கிகளுக்கு அழைத்துச் சென்று அவர்கள் பணம் பெற உதவினர்.**

வடக்கு உட்பட நாடு முழுவதும் இந்த நடவடிக்கை நேற்று நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. ஜூன் 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் ஒய்வூதியக கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டதன்படி நேற்று குறித்த கொடுப்பனவு வழங்கல் ஆரம்பமானது.



இந்தநிலையில் ஓய்வூதியதாரர்களின் அடையாள அட்டைகளை பயணக் கட்டுப்பாட்டில் அனுமதிப் பத்திரமாக உபயோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியக் கொடுப்பனவு பெறுவோர் தமக்குரிய கொடுப்பனவை வங்கிகளில் பெறவுள்ள நிலையில் தற்போதுள்ள பயணத் தடையின் காரணமாக ஓய்வூதியக் கொடுப்பனவை பெறுவோர் தமது கொடுப்பனவைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இராணுவத்தினரால் வாகன ஒழுங்குகள் ஏற்பாடுசெய்யப்பட்டன. இ.போ.ச. பஸ்கள் மற்றும் இராணுவ வாகனங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவை பெறுவோர் அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை, சீரான முகக்கவசம் அணியாதவர்களுக்கு இராணுவத்தினர் முகக்கவசங்கள் வழங்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தங்களால் இயன்றோர் தாமாகச் சென்றும் குறித்த கொடுப்பனவைப் பெற்றுச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-18,246,113)

## மட்டுவிலில் ஒரே குடும்பத்தின் நான்காவது நபருக்கும் தொற்று

சாவகச்சேரி, ஜூன் 11

மட்டுவில் பகுதியில் ஓரே குடும்பத்தைச் சேர்ந்த நான்காவது நபருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் தம்பி ஆகியோருக்குத் தொற்று ஏற்பட்ட நிலையில் நான்காவதாக அங்குள்ள 15 வயதுச் சிறுமிக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் சிறுமிக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொடிகாமம் பொலிஸார் இருவர் உட்பட உசன், விடத்தற்பளை மற்றும் கொடிகாமம் தெற்கு ஆகிய பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் ஆறு பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9,131)

## நோயுற்ற பிள்ளை எனக்காட்டி ஹெரோய்ன் கடத்திய தம்பதி

கொழும்பு, ஜூன் 11

சுகவீனம் அடைந்திருக்கும் தங்களுடைய ஐந்து வயதான பிள்ளையை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கின்றோம் என்றுகூறி, அதிசொகுசு காரில் போதைப்பொருள் விற்பனை செய்துகொண்டிருந்த ஜோடியை கண்டி பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அந்த காரிலிருந்து 22 லட்சம் ரூபா பணம், 60 கிராம் ஹெரோய்ன் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிள்ளை சுகவீனம் அடைந்துள்ளார் என்று கூறி அந்த ஐந்து வயதான பிள்ளை, துணியொன்றால் சுற்றப்பட்டு, வாகனத்தின் ஆசனத்தில் கிடத்தப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்கு இடமான அந்த வாகனம் பொலிஸாரின் சோதனையிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு தப்பிச்சென்றுள்ளது.

எனினும், வாவியோரத்தில் வைத்து வாகனத்தை மடக்கிப்பிடித்த பொலிஸார் வாகனத்தை சோதனைக்கு உட்படுத்துவதற்கு முயன்றுள்ளனர். எனினும், அந்த ஜோடி அதற்கு கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

சந்தேகம் கொண்ட பொலிஸார், வாகனத்தில் சோதனை நடத்தியபோது, 22 லட்சம் ரூபாவைக் கைப்பற்றினர். அதனையடுத்து மேற்கொண்ட தேடுதலில் பெண்ணிடமிருந்து 5 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. வாகனத்திலிருந்து 55 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட ஜோடி, நகரத்துக்கு அண்மையிலிருக்கும் ஹொட்டலொன்றில் தங்கியிருந்தே ஹெரோய்ன் போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் விற்பனை செய்துவந்துள்ளனர் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வரப்படுகிறது எனவும் தெரிவித்தனர். (கு-இ)





## வருமானம் இழந்தோருக்கு உதவினார் வடக்கு டி.ஐ.ஜி.

யாழ்ப்பாணம், ஜூன் 11

நாடு முழுவதும் பரவிவரும் கொரோனாத் தொற்று நோய் காரணமாக தமது வாழ்வாதாரத்தை இழந்து பாதிப்புக்கு உள்ளாகிய 50 குடும்பங்களுக்கு வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபரின் தனிப்பட்ட நிதியின் கீழ் உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் வைத்து நேற்று வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண, பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு உலருணவுப்பொதிகளை வழங்கினார்.

தெல்லிப்பழை பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கும் கோப்பாய் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் குடும்பத்தினர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (கு-26,20)

## புரியாணி உணவுப் பார்சலை பறித்துச்சென்ற பொலிஸார்

*மருதனார்மடம் பகுதியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜூன் 11

வாடிக்கையாளர்களுக்கு உணவு விநியோகிக்கச் சென்றவரிடம் இருந்த உணவை (புரியாணி) பொலிஸார் பறித்துச்சென்ற சம்பவம் ஒன்று நேற்று மருதனார்மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் உள்ள உணவகத்தில் மருதனார்மடம் பகுதியில் உள்ள ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உணவைப் பெறுவதற்கு முற்பதிவு செய்துள்ளார்.

குறித்த உணவுப்பொதிகளுடன் உணவு விநியோகிப்பவர் மருதனார்மடம் பகுதிக்கு வந்தபோது, மருதனார்மடம் சந்தியில் வாகனத்தில் வந்த பொலிஸார் அவரை மறித்து சோதனை செய்துள்ளனர். இரு உணவுப்பொதிகள் இருப்பதைப் பார்த்த பொலிஸார் அதை எடுத்துக்கொண்டு வேகமாக சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்த உணவு விநியோகிப்பவர், 119 க்கு அழைப்பை எடுத்து முறைப்பாடு பதிவுசெய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-26)

## மருந்துகளை தபாலில் பெற மேலும் இரு தொ.பே. இலங்கங்கள்

*யாழ்.போதனா மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை*



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாதாந்த சிகிச்சை பிரிவுகளில் மருத்துவசேவை பெறும் நோயாளர்கள், தபால் மூலமாக தமக்குரிய மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ள, மேலும் இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நாட்டில்நிலவும்கொவிட் -19நிலைமை காரணமாக மருந்துகளை வீடுகளுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 021 222 2268, 021 315 2921 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 021 221 4249, 021 222 2261, 021 222 3348 ஆகிய தொலைபேசி இலக்கங்களும் நோயாளர்கள் நலன்கருதி அறிவிக்கப்பட்டிருந்தன. இதன்படி, தற்போது மேற்குறித்த ஐந்து இலக்கங்களும் நோயாளர்களுக்காக இயங்கவுள்ளன என்று மருத்துவமனை தரப்புத் தெரிவித்தது.

எனவே, நோயாளர்கள் தங்களுக்குத் தேவையான மருந்து வகைகளை மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தங்களுடைய விவரங்களை (பெயர், கிளினிக் இலக்க முழுமையான விலாசம், தொடர்புகொள்ள வேண்டிய தெலைபேசி இலக்கம்) அறியத்தந்தால் உரிய மருந்துகள் தங்களுக்கு தபால் மூலமாக எவ்வித கட்டணமும் இன்றி அனுப்பி வைக்கப்படும்.

இந்த நடவடிக்கைக்கு நோயாளர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் மருத்துவமனைத் தரப்பு கோரியுள்ளது. (கு-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப்படுத்தல் தொடர்பில் யாழ்.செயலகத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜுன் 11

யாழ். மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்யும் விவசாய பொருள்களை விற்பனைசெய்து எஞ்சியுள்ள விவசாய உற்பத்திப் பொருள்களை எவ்வாறு மாகாணத்துக்கு வெளியே அல்லது வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டங்களில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தல் அல்லது மொத்த வியாபாரிகளிடம் எவ்வாறு அதனை சேர்ப்பித்தல் என்பவை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இது தொடர்பில் ஆராயப்பட்டது.

மேலும் விவசாய உற்பத்தி பொருள்கள் அதிக அளவில் கொண்டுள்ள விவசாயிகளை எவ்வாறு மொத்த வியாபாரிகளுடன் இணைப்பது தொடர்பில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் ஆராயப்பட்டதோடு ஜனாதிபதியின் 'நஞ்சற்ற விவசாயத்தை ஊக்குவிப்போம்' என்ற எண்ணக்கருவுக்கு அமைய சேதனப்பசளை மூலம் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் சேதனப்பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க கையாள வேண்டிய உத்திகள் என்பவை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன் யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே சேதனப்பசளை மூலம் விவசாயத்தை செயற்படுத்துவோர், சேதனப்பசளை மூலம் விவசாயத்தை மேற்கொள்வோரை ஊக்கப்படுத்தல் புதிய சேதனப்பசளை தயாரிப்பாளர்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தல், குறித்த சேதனப்பசளை உற்பத்தி தொடர்பில் முதலிட முன்வருவோரை ஊக்கப்படுத்துதல் மற்றும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை தொடர்பில் இன்றைய கூட்டத்தின்போது ஆராயப்பட்டதோடு குறித்த விடயங்கள் தொடர்பில் விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்கள் அல்லது தகவல்களைப் பெற விரும்புவோர் மாகாண விவசாய உதவிப் பணிப்பாளருடன் விவசாயிகள் தொடர்புகொண்டு தமக்குரிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என குறித்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படாது எஞ்சும் மரக்கறிகள் மற்றும் பழவகைகளை அரசு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த வாரம் அனுமதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு-20)



# மன்னாரில் கரையொதுங்கும் பேர்ள் கப்பல் கழிவுகள்

*அச்சத்தில் மீனவர்கள்*

**மன்னார்,ஜுன் 11**

**அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தானது என்று சந்தேகிக்கப்படும் சில பொருள்கள் நேற்று மன்னார் வங்காலை கடற்பரப்பில் கரையொதுங்கியுள்ளன.**

வங்காலை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள கடற்பரப்பிலேயே ஆபத்தான சிறிய பிளாஸ்ரிக் உருண்டைகள் கரை ஒதுங்கியுள்ளன என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறிய உருண்டைகள் கடற்கரையோரங்கள் முழுவதிலும் சிதறிக் கிடப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. குறித்த பகுதிக்கு சுகாதார மருத்துவ அதிகாரிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் நேரடியாக சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

மேலும் மன்னார் அரிப்பு பகுதியிலும் குறித்த பிளாஸ்ரிக் பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-56)



# மாற்றுத் திறனாளிகள், முதியவர்களுக்கு உதவிகள் விரைந்து கிடைக்க வேண்டும்

*கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்*

கிளிநொச்சி,ஜுன் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள் மற்றும் சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலில் உள்ளோருக்கான கொடுப்பனவுகளை விரைந்து வழங்குவதற்கு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் திருமதி. சர்மிளா தயாபரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்படி கொடுப்பனவுகளுக்காக காத்திருப்போர் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என்பதால் அதிகாரிகளிடம் முறையிடுமாறு எம்மிடம் தெரிவிக்கின்றனர். மேற்படி குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கூடுதலான குடும்பங்கள் தொழில்செய்ய முடியாத நிலையில் உள்ளனர். வறுமையான குடும்பங்கள் என அடையாளப்படுத்தப்பட்டு சமுர்த்திக்கு உள்வாங்கப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள் வறுமை நிலையில் வாடுகின்றனர்.

மாவட்டத்தில் முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கூடுதலாக உள்ள நிலையில் அரச கொடுப்பனவுகளை விரைந்து பெற்றுக் கொடுப்பதற்கு மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ஐ-13)

# அரசின் தவறான நடவடிக்கையால் அனைத்து மீனவ சமூகங்களும் பாதிப்பு

*சாள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு*

மன்னார்,ஜுன் 11

அரசாங்கத்தின் தவறான நடவடிக்கையால் இலங்கையின் அனைத்து மீனவ சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு கடற்பகுதியில் தீப்பற்றி எரிந்த நிலையில் கடலில் மூழ்கடிக்கப்பட்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் ரசாயன கழிவுகள் மன்னார் மாவட்டத்தின் பல கடற்கரையோர பிரதேசங்களிலும் கரையொதுங்கி வருகின்றன. இதனை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரை ஒதுங்கியுள்ள இரசாயன கழிவுப் பொருள்கள் கப்பலில் இருந்து வெளியானவை என்பது உறுதிபடத் தெரிகின்றது. உண்மையில் இந்த விடயம் அரசாங்கத்தினுடைய அசமந்தப் போக்கு காரணமாகவே ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்படுகின்ற பின் விளைவுகள் தெரியாமல் இந்த அரசாங்கம் எடுத்த தவறான தீர்மானங்களால் மீனவ சமூகம் மாத்திரமல்ல அனைத்து மக்களும் மிகவும் பெரியதொரு அச்ச நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் உடனடியாக இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவ மக்கள் குறிப்பாக இந்த பயணத் தடைக் காலத்தில் பிடிக்கின்ற மீன்களை சந்தைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு மக்களுக்கு உடனடியாக மேலதிகமான நிவாரணங்கள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக கொழும்பு கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜய்சேகரவுக்கு தெரியப்படுத்தி இருக்கின்றேன். இதற்காக கொழும்பில் தனி பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கிறது எனவும், அந்த பிரிவுக்கு உடனடியாக தான் தெரியப்படுத்துவேன் எனவும் அவர் கூறியிருந்தார் என்றார். (ஐ-213)

# சிறப்புத் தேவையுடையவரால் உலருணவு கையளிப்பு

கிளிநொச்சி,ஜுன் 11



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய ஒருவர் மாவட்டத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுடைய சிலருக்கு தன்னாலான உணவுப் பொருள்களை வழங்கிவருகிறார். சிறப்புத் தேவையுடைய மரக்கறி வியாபாரியான கருப்பையா ஜெயக்குமார், தன்னைப்போல் உள்ள சிறப்புத் தேவைக்குட்பட்ட சிலருக்கு தன்னால் இயன்ற உணவுப் பொருள்களை வழங்கிவருகிறார். இந்தச் சேவையானது கிளிநொச்சி மாவட்ட மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது. (ஐ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உப பணிமனைக்கு அடிக்கல் நடுகை

முல்லைத்தீவு,ஜூன் 11

முல்லைத்தீவு கருநாட்டுக்கேணியில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உப பணிமனை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட ஆறு மில்லியன் நிதியில் இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் கி.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன், முன்னாள் தவிசாளர் க.தவராசா ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல் நட்டு வைத்தனர்.

மேலும் நிகழ்வில் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.திலிபன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் இ.கவாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-13)

# காற்றாலை மின்உற்பத்தி நிலையத்தில் திருட்டு

## மன்னாரில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 11

மன்னாரிலுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் கேபிள்களை திருடிய குற்றச்சாட்டில் 6 பேர் தலைமன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில், காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் பாதுகாப்பு அலுவலர் ஒருவரும் உள்ளடங்குகிறார் என தெரிவித்துள்ள பொலிஸ் பேச்சாளர், கட்டுமானத்துக்கு கொண்டுவரப்பட்ட 340 மீற்றர் நீளமான கேபிள் திருடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (ஒ.5.இ)

# வர்த்தக நிலையத்தில் கசிப்பு விற்பனை

## சந்தேகத்தில் ஒருவர் கைது

கிளிநொச்சி,ஜூன் 11

தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் கசிப்பை மறைத்து வைத்து விற்பனைசெய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புளியம்பொக்கணை பகுதியில் நேற்று இடம்பெற்றது.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 60 லீற்றர் கசிப்பை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-113)

## இந்தியாவில் இருந்து

# கடல்வழியாக வந்தவர் பொலிஸாரால் கைது



**முல்லைத்தீவு,ஜூன் 11**

**இந்தியாவில் இருந்து கடல்வழியாக இலங்கைக்கு வந்த இளைஞர் ஒருவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

அரச புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்தியாவில் இருந்து கடல்வழியாக இலங்கைக்கு பலர் வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் மாவட்டங்கள் தோறும் தேடுதல் மேற்கொண்ட அரச புலனாய்வுப் பிரிவினர் முள்ளியவளைக்கு இளைஞர் ஒருவர் வந்துள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது.

இவர் எப்போது? எவ்வாறு வந்தார்? என்பது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் முள்ளியவளை பொலிஸாரால் குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தனர். (ஐ-19)

# மாதர் சங்கக் கட்டடம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருட்டு

கிளிநொச்சி,ஜூன் 11

கிளிநொச்சி திருநகர் வடக்கு மாதர் சங்கத்தின் கட்டடம் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

கட்டடத்தில் வைக்கப்பட்ட தளபாடங்கள், தையல் இயந்திரம்மற்றும் குழந்தைகளை நிறுக்கும் தராசு என்பவை திருடப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் 600 மீற்றர் தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)



# கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக கசிப்பு உற்பத்தி

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஜூன் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் பயணத் தடை காலத்திலும் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் சகல கிராமங்களிலும் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகிறது. இதன் காரணமாக சமூக வன்முறை மற்றும் குடும்ப வன்முறை என்பவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

சட்டவிரோத கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துமாறு பொதுமக்களால் கிராம அலுவலர்களிடம் தொடர்ச்சியாக முறைப்பாடு வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவிலில் இந்து ஆலயம் திட்டமிட்டே இடிக்கப்பட்டது

## சாவ.பிரதேச சபை உறுப்பினர் கண்டனம்

கொடிகாமம், ஜூன் 11

மிருசுவிலில் வீதியோரத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் திட்டமிட்டே இடிக்கப்பட்டது. ஆலயம் இடித்தமை கடுமையான கண்டனத்துக்குரியது என்று சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்துள்ளார்.

கொடிகாமத்துக்கும் மிருசுவிலுக்கும் இடையில் வீதியோரத்தில் அமைந்த அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் ஆலயம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இனந்தெரியாதோரால் இடித்தழிக்கப்பட்டது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

300 வருடகால வரலாற்றைக் கொண்ட சிறப்புமிக்க மிருசுவில் பிள்ளையார் ஆலயத்தை இடித்தவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட வேண்டும் .

பயணக் கட்டுப்பாட்டு நேரத்தில் குறித்த சம்பவம் நடந்ததையிட்டு அப் பகுதி மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

இவ் வீதியோர பிள்ளையார் மிகவும் புதுமை வாய்ந்தவர். அன்று கிடுகு வண்டில்கள் சரி இன்று கனரக வாகனங்கள் சரி சற்று நின்று ஆலடியானுக்கு கற்பூரம் கொளுத்தி வணங்கிவிட்டுத்தான் பயணம் செய்வதுண்டு. நம்பிக்கையுடன் தான் அப் பகுதி மக்கள் வாழ்கின்றனர். இந்த செயலை செய்தவர்கள் ஆலடியடிப் பிள்ளையாரின் கண்ணில் இருந்து தப்பிக்க முடியாது என்பது இக் கிராம மக்களின் நம்பிக்கையாகும் - என்றார். (ஐ-159)

# ரிக்வோல் நடுவர் தெரிவு; விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூன் 11

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ரிக்வோல் (TEQBALL) விளையாட்டு நடுவரை தெரிவுசெய்வதற்கான பரீட்சை நடைபெறவுள்ளது.

உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டில் ஆர்வம் உள்ள ஏனைய பாட ஆசிரியர்கள் அனைவரும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

ஒன்லைன் மூலம் நடைபெறும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் 0767100251 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆபத்து அகலவில்லை

எதிர்வரும் 14ஆம் திகதியுடன் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பயணத்தடை நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினம் நள்ளிரவு மீண்டும் இந்தத் தடை நடைமுறைப் படுத்தப்பட்டு அதிகாலையில் தளர்த்தப்பட வாய்ப்புக்கள் இருக்கின்ற போதிலும், சுமார் மூன்று வாரங்களுக்கும் மேலாக நீடித்துவந்த இந்தப் பயணக் கட்டுப்பாடுகள் மீக நீண்ட இடைவெளியின் பின்னர் தற்போது நீக்கப்படுகின்றன. ஆனால், கட்டுப்பாடுகள்தான் எம்மை விட்டு நீங்குகின்றனவே தவிர ஆபத்து நீங்கவேயில்லை என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.


கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன என்பதற்கு கொரோனா எம்மை நீங்கிவிட்டது அல்லது அதன் கோரத்தன்மை குறைந்துவிட்டது என்று பொருள் அல்ல. பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தாலும் அன்றாடம் சராசரியாக 2,500க்கும் அதிகமான தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். ஒவ்வொருநாளும் சராசரியாக 40 பேர் வரையான இறப்புக்கள் அறிக்கையிடப்படுகின்றன. இத்தகையதொரு பின்னணியில்தான் இந்தப் பயணத் தடை நீக்கப்படுகின்றது என்பது அனைவருக்கும் நினைவிருக்கட்டும்.

இலங்கை மிகச்சிறிய பொருளாதார பின்புலத்தைக் கொண்டுள்ள ஒரு நாடு. நாட்டை முடக்கி வைத்திருந்தால் தேசிய பொருளாதாரத்தில் அது மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இதை நாட்டின் ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் வரையில் பலரும் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். கொரோனா கோரத்தாண்டவம் காட்டிய நிலையில் நாடு முடக்கப்படாமல் 'பயணத்தடை' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட சமாளிப்புகளுக்கும் அதுவேதான் காரணம். இது அனைவருக்கும் தெரிந்ததே. ஆக, இத்தகையதொரு பின்னணிதான் தற்போது பயணத்தடை நீக்கப்படவும் காரணமாகின்றது.

எதிர்ப்பட்டு உருண்டோடிவரும் வெள்ளத்தை ஒரு மடையில் அடைத்துவிட்டு, பின்னர் அதைத் திறந்துவிட்டால் அது எவ்வளவு வேகம்கொண்டதாக பாய்ந்து செல்லுமோ, அதுபோன்று எதிர்வரும் 14ஆம் திகதியும் அதற்கு அண்மைய நாள்களும் ஆகிவிடுமோ என்ற அச்சம் சுகாதாரத் துறையினரிடத்தில் மேலிடுகின்றது. சுமார் 3 வாரங்களுக்கும் மேலாக வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தவர்கள் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் நாள்களில் தாம் நினைத்தால்போல் பயணங்களை மேற்கொண்டால் நிலைமை கைமீறிப்போய்விடும் என்பது அவர்களின் அச்சத்துக்கான காரணம். அதில் நியாயத்தன்மை இல்லாமலில்லை.

இந்தப் பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று, கட்டுப்பாடுகள், பயணத்தடைகள் விதிக்கப்பட்ட நாள்களிலேயே சராசரியாக 2,500 தொற்றுக்கள் தொடர்பான அறிக்கையிடல்களையும், 40 இறப்புக்கள் தொடர்பான அறிக்கையிடல்களையும் நாம் சந்தித்திருக்கின்றோம். அவ்வாறெனில், இந்த நிபந்தனைகள் தளர்த்தப்பட்டால் நிலைமை எவ்வளவு மோசமாகும் என்பதை நாம் அனைவரும் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

பொருளாதாரப் பின்புலத்தாலும் இன்னபல காரணங்களாலும்தான் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன. அதன் அர்த்தம் கொரோனா கட்டுக்குள் இருக்கின்றது என்பதல்ல. எனவே, நாட்டை மீண்டும் ஒரு முடக்கத்துக்குள்ளோ அல்லது நீடித்த தொடர்ச்சியான பயணத் தடைக்குள்ளோ கொண்டுசெல்லாதிருப்பது எம் அனைவரதும் கரங்களில்தான் உள்ளது. எம்முடைய பொறுப்பற்ற நடவடிக்கைகளும் கடந்த மூன்று வார காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பயணத் தடைக்குக் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆதலால் பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.




# பி.சி.ஆர். முடிவுகள் வெளிவரத் தாமதம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டுகின்றது

**கொழும்பு, ஜூன் 11**

**நாட்டில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் வெளிவருவதற்கு நீண்ட கால தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்களை மருத்துவமனைகளில் சேர்ப்பதற்கு தாமதமாகின்றது. இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகக் குழு உறுப்பினருமான மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவிக்கையில்; மாவட்ட ரீதியில் தொற்றாளர்கள் இனம் காணப்பட்ட வீதத்துக்கும் உயிரிழப்புக்களுக்கும் இடையில் உள்ள தொடர்பை பகுப்பாய்வு செய்துள்ளோம். மாவட்டத்தில் இனம் காணப்படும் ஆயிரம் தொற்றாளர்களில் இறப்பு வீதம் கூடிய மாவட்டமாக காலியும், இரண்டாவதாக பதுளையும் மூன்றாவதாக நுவரெலியா மாவட்டமும் காணப்படுகின்றன.

அதேபோன்று சனத்தொகை அடிப்படையில் எடுத்துக்கொண்டால், ஒரு மில்லியன் பேரில் அதிகளவான இறப்புக்கள் பதிவான மாவட்டமாக களுத்துறை காணப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக காலி மாவட்டம் காணப்படுகின்றது.

மேலும் சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு கொரோனா கட்டுப்பாட்டுக்கு சரியான முகாமைத்துவ உத்திகளை வகுக்கவேண்டும். அவர்கள் விரைந்து தரவுகளைச் சேகரிக்கவேண்டும். தொற்று நோய்த் தடுப்புப் பிரிவில் உள்ள மருத்துவர்கள் மாவட்ட ரீதியாகச் சென்று விரைந்து தரவுகளைச் சேகரிப்பதன் ஊடாகவே தொற்றை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்யலாம் - என்றார். (ஒ,5)

# ஜேர்மனியில் 20 தமிழர்கள் பலவந்தமாக நாடு கடத்தல்

கொழும்பு,ஜூன் 11

ஜேர்மனியில் சுமார் 20 தமிழர்கள், பலவந்தமாக தனி விமானம் ஒன்றில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை ஜேர்மனியிலிருந்து ஈழத் தமிழ் அகதிகள் நாடுகடத்தப்படுவதை எதிர்த்து, பிரேமன் மனித உரிமை அமைப்பும் ஏனைய சில அமைப்புகளும் இணைந்து ஜேர்மனியில் போட்ஸ்ஹைம் நகரில் அமைந்துள்ள தடுப்பு முகாமுக்கு எதிரில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன. இந்தப் போராட்டத்துக்கு மத்தியில் பொலிஸ் பாதுகாப்புடன் தடுப்பு முகாமுக்கு உள்ளே நுழைந்த வாகனம், அகதிகளை ஏற்றிக் கொண்டு விமான நிலையம் சென்றுள்ளது. அந்த வாகனத்தைச் செல்லவிடாமல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுக்க முயன்றபோதிலும், கடுமையான பொலிஸ் பாதுகாப்புடன் வாகனம் வெளியேறியது.

பிராங்போர்ட் விமான நிலையத்திலும் பெருந்தொகையான தமிழர்களும், ஜேர்மன் நாட்டவர்கள் சிலரும் இணைந்து எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். எனினும் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் இரவு விசேட விமானம் ஒன்றின் மூலம் நாடு கடத்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத் தொழிற்சாலை வழக்குகள்; எதிர்வரும் 15 ஆம் திகதி விசாரணை

**கிளிநொச்சி, ஜுன் 11**

**கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையிலிருந்து தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த தொடரப்பட்ட இரு வழக்குகளும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு விசாரணைகளுக்காக தவணையிடப்பட்டன.**

கரைச்சி பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பா.லெனின் குமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

குறித்த மனுவை விசாரித்த நீதிவான், ஆடைத் தொழிற்சாலைகளை மூடித்தான் தொற்று நோயை கட்டுப்படுத்த வேண்டுமா என்ற விளக்க அறிக்கையை எதிர்வரும் 15 ஆம் திகதி மன்றில் அறிக்கையிடுமாறு கட்டளை பிறப்பித்தார்.

இதேவேளை, குறித்த ஆடைத் தொழிற்சாலையிலிருந்து சமூகத் தொற்று ஏற்படாத வகையில் தற்காலிகமாக தொழிற்சாலையை மூடுமாறு பொதுமக்கள் 6 பேர் மனு ஒன்றையும் நேற்று சட்டத்தரணிகள் ஊடாக சமர்ப்பித்தனர்.

குறித்த மனுவையும் ஏற்றுக் கொண்ட நீதிவான், எதிர்வரும் 15 ஆம் திகதி விசாரணைக்காக தவணையிட்டுள்ளார். (ஐ-316)



## புலம்பெயர் உறவுகளால் 9,50,000 ரூபா பெறுமதியான உலருணவுகள் கையளிப்பு

கிளிநொச்சி, ஜுன் 11

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக புலம்பெயர் உறவுகளால் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி தருமபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள் குறித்த நிதியை வழங்கியுள்ளன.

உலருணவுகள் பொதிகளாக்கப்பட்டு நாளை(இன்று) மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்று கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜீவராசா தெரிவித்துள்ளார். (ஐ-6)

## மன்னார் மாவட்டத்தில் கடந்த 10 நாள்களில் 26 தொற்றாளர்கள்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஜுன் 11

மன்னார் மாவட்டத்தில் கடந்த 10 நாள்களில் 26 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த வருடம் 516 தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



அத்துடன் சமூக மட்டத்தில் 187 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகள் எதிர்பாக்கப்படுகின்றன. எனவே மக்கள் தொடர்ந்தும் சுகாதார நடை முறைகளை கடைப்பிடித்து நடக்கவேண்டும் - என்றார். (ஐ-56)

## கொரோனாவை விரட்ட அராலியில் வழிபாடு

அராலி, ஜுன் 11

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் அராலி மயிலியப்புலம் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு ஜோதிடசிகாமணி சிவஸ்ரீ இ.க.சுகிந்தன் குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் நடைபெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்கள் தோறும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'கியூமெடிகா' நிறுவனத்தால் சுகாதாரப் பொருள்கள் கையளிப்பு

வவுனியா, ஜுன் 11

கியூமெடிகா அரச சார்பற்ற நிறுவனத்தால், வவுனியா மாவட்டச் செயலரிடம் ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் மற்றும் ஆயிரம் ரூபா பெறுமதியான 200 பொதிகளே இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டச் செயலகத்தில் இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருள்கள் மக்களுக்கு வழங்குவதற்காக மாவட்டச் செயலகத்தால், வவுனியா பிரதேச செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ப-110)





## 107 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

மன்னார், ஜுன் 11

பயணத் தடையால் தொழில் வாய்ப்பை இழந்த வறுமையில் உள்ள 107 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேசத்துக்கு உட்பட்ட சவிரி குளம் வங்காலை தலைமன்னார் மற்றும் பியர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் போன்றோருக்கே அண்மையில் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பணிப்புக்கு அமைய தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட காரியாலயத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-213)

## சுகாதாரப் பரிசோதகர்மீது வவுனியாவில் தாக்குதல்

### சந்தேகநபர் கைது

வவுனியா, ஜுன் 11



கடமையில் ஈடுபட்டிருந்த சுகாதாரப் பரிசோதகர் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை வவுனியா சாந்தோலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

முகக் கவசத்தை சீரான முறையில் அணியாமல் வீதியால் சென்ற இளைஞரிடம், அதனை சீராக அணியுமாறு சுகாதாரப் பரிசோதகர் எச்சரித்துள்ளார்.

இதனால் கோபமடைந்த குறித்த இளைஞர் சுகாதாரப் பரிசோதகரை தாக்கினார் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த சுகாதாரப் பரிசோதகர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சந்தேகத்தில் ஒருவரை நேற்றுக் காலை கைதுசெய்துள்ளனர். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# மூன்று மாதங்களில் கொரோனா கட்டுக்குள்

## அரசு நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 11

இன்னும் மூன்று மாதங்களுக்குள் இலங்கையில் கொரோனாத் தொற்றை முற்றாகக் கட்டுப்படுத்த முடியும் என்று அரச மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நிலைமையை நெருங்க வேண்டுமாயின், இலங்கை மக்கள் தொகையில் 60 வீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட வேண்டும். இதற்காக உலகில் தடுப்பூசிகளைத் தயாரிக்கும் நான்கு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனடிப்படையில் நாட்டுக்குத் தேவையான தடுப்பூசிகள் கிடைக்கும். எவ்வாறாயினும் நாட்டு மக்கள் கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்க்கையை பழக்கப்படுத்த வேண்டும். இன்னும் மூன்று மாதங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன.

எனினும் வைரஸ் உருமாறும் நிலைமை மற்றும் அதற்கு தடுப்பூசிகள் ஈடுகொடுக்கும் தன்மைக்கு ஏற்ப நிலைமை மாறுபடலாம். என்றார். (எ-4)

# 2022க்குள் அனைத்து மக்களையும் கொரோனாவிலிருந்து காப்போம்

## இராணுவத் தளபதி அதீத நம்பிக்கை



**கொழும்பு, ஜூன் 11**

**2022 ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் அனைத்து மக்களையும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியிலிருந்து பாதுகாப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் என இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப்பாடு மற்றும் ஒழிப்பு தொடர்பான தேசிய மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

இலங்கை முதலீட்டுச்சபை, இலங்கை வர்த்தக பேரவை மற்றும் கொழும்பு பங்குச்சந்தை ஆகியவற்றின் ஒன்றிணைந்த ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இலங்கை முதலீட்டு பேரவை மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றியபோதே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்:

கொரோனா வைரஸ் பரவல் முன்னெப்போதுமில்லாத அளவுக்கு மனித உயிரின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கின்றது.

தற்போதைய வாழ்க்கை முறையைப் பொறுத்தவரையில், நாம் எம்மை தனிமைப்படுத்திய ஒரு கட்டமைப்புக்குள் வாழமுடியாது. மாறாக சர்வதேசத்துடன் பொருளாதார மற்றும் சமூக ரீதியான தொடர்பாடலையும் நல்லுறவையும் பேணுவது இன்றியமையாததாகும்.

அதேவேளை, கொரோனா வைரஸ் பரவலிலிருந்து முழுமையாக மீண்டு, பொருளாதாரத்தை கட்டியெழுப்பி, மீளவும் பழைய நிலைக்குத் திரும்புவதென்பது மிகப்பெரும் சவால் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக அவர்களின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதிலும் தொற்றுக்குள்ளாவோரின் வீதத்தை குறைப்பதிலும் கவனம் செலுத்தினோம். கொரோனா வைரஸ் பரவலின் முதலாம் மற்றும் இரண்டாம் அலையை திறம்பட எதிர்கொண்ட நாம், இப்போது அதன் மூன்றாவது அலையையும் வெற்றிகரமாக முறியடிக்கும் நிலையை அண்மித்திருக்கின்றோம்.

அதுமாத்திரமன்றி இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டுப் பிரஜைகள் மற்றும் வர்த்தக பங்காளர்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒருபோதும் தவறவில்லை." என்றார். (த-22)



# இன்னமும் தணியவில்லை கொரோனாவின் அபாயம்!


## பயணத் தடையை நீடிப்பதா? அரசே தீர்மானிக்கும் என்கின்றார் சுதர்ஷினி

கொழும்பு, ஜூன் 11

"நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் அபாயம் இன்னமும் தணியவில்லை. எனவே, தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிப்பதா, இல்லையா? என்பதை அரசே தீர்மானிக்கும்."

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாட்டில் அடையாளம் காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த வாரத்தை விடவும் அதிகரித்துள்ள அதேவேளை, கொரோனாவால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் 28 வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பது பற்றி நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த அவர், பயணக் கட்டுப்பாட்டுக்கு முன்னர் தொற்றுக்கு உள்ளானவர்களே தற்போது அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார். பயணக் கட்டுப்பாடுகளுக்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களிடமிருந்து 14 வாரங்கள் வரை வைரஸ் சமூகத்தில் பரவல் அடையும் எனவும் அவர் தெரிவித்தார். இந்த நிலையில், நாட்டின் நிலைமைகளை ஆராய்ந்து எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு பின்னர் பயணக் கட்டுப் பாடுகளை தொடர்வதா? என அரசு முடிவெடுக்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-22)



# கட்டுப்பாடுகளை கடுமையாக்கவும்

## மருத்துவ நிபுணர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 11

கொரோனாத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துள்ளது. எனவே கட்டுப்பாடுகளைக் கடுமையாக்க வேண்டியது அவசியம் என்று விசேட மருத்துவ நிபுணர்களின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தால், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், தொற்றால் இறப்போரின் எண்ணிக்கையும், அதிகரித்துள்ளதால், தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை இன்னும் கடுமையாக்க வேண்டும்.

தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதால் மருத்துவமனைகள் நிரம்பியுள்ளன. இந்த நிலைமை தொடர்ந்தால் தொற்றாளர்களை மருத்துவமனைகளில் அனுமதிக்க முடியாது.

தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை 12 வீதத்தாலும், தொற்றுக்குள்ளாகி உயிரிழப்போரின் எண்ணிக்கை 28 வீதத்தாலும், அதிகரித்துள்ளது.

இதேவேளை தடுப்பூசிகளைச் செலுத்தும் பணிகளின் போது இரண்டாவது டோஸ்களை காலதாமதமின்றி பெற்றுக்கொள்வதற்கு ஸ்தீரமான முறையொன்று பின்பற்றப்பட வேண்டும். அதுமட்டுமன்றி வேறு நோய்களுக்கான சிகிச்சைகளுக்காக வருவோருக்கு வழங்க வேண்டிய மருந்துகளை அரச மருத்துவமனைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதும் முக்கியமானதாகும். என்றுள்ளது. (எ-4)

# மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த களத்தில் இறங்கியது விசேட பொலிஸ்

கிளிநொச்சி, ஜூன் 11

பயணக்கட்டுப்பாட்டுக் காலத்தில், கிளிநொச்சி நகரில் படிப்படியாக மக்கள் நடமாட்டம் அதிகரித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் நடமாடும் பிரிவு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் நடமாடும் பொலிஸ் பிரிவு திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருவதுடன், அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்து பொருத்தமற்ற காரணங்களுடன் நடமாடும் மக்களை எச்சரித்து திருப்பி அனுப்பி வருகின்றனர்.


தொடர்ந்தும் குறித்த நடமாட்டம் அதிகரிக்குமாயின், அத்தியாவசிய தேவைகள் இன்றி வீதிகளில் நடமாடுவோர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அதேவேளை ஏ9 வீதியுடன் இணையும் அனைத்து இணைப்பு வீதிகளிலும் படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இரணைமடுச் சந்தி, டிப்போச் சந்தி, கரடிபோக்குச் சந்தி, மற்றும் பரந்தன் சந்தி உள்ளிட்ட பகுதிகளில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு மக்களின் தேவையற்ற நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனைப்பசளை முறைமையை வடக்கிலிருந்து ஆரம்பியுங்கள்

## ஞானசாரதேரர் ஆலோசனை



**கொழும்பு, ஜூன் 11**

**சேதனைப்பசளை முறைமைக்கு விவசாயத்தை நகர்த்தும் திட்டத்தை, வடக்கு மாகாணத்திலிருந்து முதலில் ஆரம்பிக்கவேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரசாயன உரர் பயன்பாட்டுக்கான தடை தொடர்பில் முன்கூட்டியே தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு, மாற்றுவழிக்கான தயார்படுத்தலை அரசு மேற்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் திடீரென முடிவுகளை அறிவித்தமை தவறான செயலாகும்.

வடக்கு மாகாணத்தில் போரால் 30 வருடங்களாக, லட்சக்கணக்கான ஏக்கர் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் கைவிடப்பட்டது. அவ்வாறான இடங்களைத் தெரிவுசெய்து, சேதனைப்பசளை ஊடாக விவசாயம் செய்யும் முறைமையை அரசு பரிசோதித்துப் பார்க்க வேண்டும். நாமே பசளையைத் தயாரிக்க வேண்டும். சீனாவில் இருந்து உரத்தை இறக்குமதி செய்வது தீர்வாக அமையாது. ஏனெனில் கழிவுகளால் தயாரிக்கப்படும் உரத்தை இந்த நாட்டுக்குக் கொண்டு வந்தால் அது புதிய பிரச்சினைகளை உருவாக்கக்கூடும்.

இரசாயன உரமின்மையால் தேயிலைப் பயிர்செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சிலோன் டீ என்ற நாமத்துக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது- என்றார். (எ-4,44)

# 113 பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமனம்

கொழும்பு, ஜூன் 11

அதிபர் வெற்றிடம் நிலவிய 113 தேசிய பாடசாலைகளுக்கு, புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அரச சேவை ஆணைக்குழுவின், கல்விச்சேவைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில், கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவால், அதிபர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக, அமர்வுகளை நடாத்தி, இசுறுபாய கட்டடத்தில் வைத்து நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்தவர்களுக்கும், இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் வெவ்வேறாக, விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை கடந்த பெப்ரவரி மாதம் இசுருபாயவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# சேதனப்பசளைத் திட்டம் விரைவில் நடைமுறைக்கு

கொழும்பு,ஜூன் 11

நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடனான, சேதனப்பசளைத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பெரும்போகத்துக்குத் தேவையான சேதனப்பசளை போதிய அளவு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். அதற்கான உற்பத்தியை உள்நாட்டில் அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (4)

# உப்பு விலை அதிகரிக்காது



கொழும்பு, ஜூன் 11

ஒரு கிலோ உப்பின் விலையை 100 ரூபாவாக அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் அதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை உப்பு உற்பத்தி நிலையத்தைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய நாள்களில் பெரும் உப்பு பற்றாக்குறையை நாட்டில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டுக்குத் தேவையான அளவு உப்பு எம்மிடம் உள்ளது. தனியார் துறையினராலும் உப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. இலங்கை உப்பை ஏற்றுமதி செய்யும் நாடாகவும் மாறியுள்ளது. அதனால் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. விலையும் அதிகரிக்கப்படாது. அதேவேளை பல அத்தியாவசிய நுகர்வுப்பொருள்களின் விலையைக் குறைத்து, ஒரு வருடத்துக்கு நிலையான விலையை அறிவிப்பதற்கு உள்ளூர் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது- என்றார். (எ-4)



# பல்கலை அனுமதிக்கான விண்ணப்பகாலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 11

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி, எதிர்வரும் ஜூன் மாதம் 18 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2020/2021 ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதிக்கான வழிகாட்டி கைநூலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் www.ugc.ac.lk என்ற இணையதளத்தில் மாத்திரமே பதிவிறக்கம் செய்து, விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-4)

# இடர்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈடு

கொழும்பு, ஜூன் 11

அண்மையில் ஏற்பட்ட இயற்கை இடர்களால் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு விரைவில் நஷ்டஈடு வழங்கப்படும் என்று நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு , அனர்த்த முகாமைத்துவ மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இயற்கை இடர்களின் போது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் இணைந்து பணியாற்றுவது அவசியம். பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இடர் காலத்தில் முப்படையினர், பொலிஸார் மற்றும் பிரதேச செயலர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் பாராட்டுக்குரியவை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# பொ.ம.நிலையங்கள் இரு நாள்கள் திறப்பு

கொழும்பு,ஜூன் 11

நாடு முழுவதும் பொருளாதார மத்திய நிலையங்கள் இரண்டு நாள்கள் மீண்டும் திறக்கப்படவுள்ளன. அதற்கமைவாக நாளையும் நாளைமறுதினமும் மொத்த வியாபாரத்துக்காக பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படும் என்று விவசாய இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் பயணத்தடை நடைமுறையில் உள்ள காரணத்தால் இதற்கு முன்னரும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-4)



# சமையல் எரிவாயு விவகாரம்: விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூன் 11


12.5 கிலோக்கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர் தொடர்பில் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

12.5 கிலோக்கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரை நாடுமுழுவதும் விற்பனைக்காக வைக்கவேண்டும் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த சமையல் எரிவாயு சிலிண்டர் சந்தையில் விற்பனைக்கு விடப்படாத காரணத்தால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபடைந்த அல்பா வைரஸுடன் இலங்கையில் பலர் அடையாளம்!



**கொழும்பு, ஜூன் 11**
**இலங்கையில் திரிபடைந்த அல்பா கொரோனா வைரஸுடன், இலங்கையில் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

இதனை சிறிஜயவர்தன பல்கலைக் கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் நிறுவனத் தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர உறுதிப்படுத்தியுள்ளார். பிரிட்டனின் திரிபடைந்த கொரோனா வைரஸ் (B117 - அல்பா) இதுவாகும்.

உயிரியல் மாதிரிகளின் அடிப்படையில் மட்டக்களப்பு,திருகோணமலை, குளியாப்பிட்டி, வாரியபொல, ஹபராதுவ, திஸ்ஸமஹா ராம, கராப்பிட்டி மற்றும் ராகம ஆகிய பிரதேசங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை இந்தியாவின் திரிபு எனக் கருதப்படும் B.1.617.2 (டெல்டா) வைரஸுடன், வாதுவ தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த நபர் இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

# பேச்சு தோல்வி; இன்று போராட்டம்

### சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11
சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளதால் இன்றைய தினம் திட்டமிட்டவாறு தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்பட்டாலும், அவசர மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வழமைபோன்று முன்னெடுக்கப்படும் என்றும் அந்தக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கொரோனா கட்டுப்பாட்டுக் கடமையில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு இலவச போக்குவரத்து வசதிகள் வழங்கல், சுகாதார ஊழியர்களின் கொடுப்பனவுகளில் தேவையற்ற கழிப்புக்களை மேற்கொள்ளலை நிறுத்தல் மற்றும் கொடுப்பனவுகளில் உள்ள முரண்பாட்டை நீக்குதல், கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களின் வெற்றிடங்களை நிரப்புவது என்பவை தொடர்பில் திட்டவட்டமான முடிவு எடுக்கத் தவறியமை, மருத்துவத்துறையினர் அல்லாத சுகாதாரப் பணியாளர்களுக்கு நியாயமான கொடுப்பனவு அதிகரிப்பை வழங்குதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே தொழிற் சங்கப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (ஒ.5.இ)

# ரஷ்யாவின் உதவிகளுக்கு பாராட்டு

கொழும்பு, ஜூன் 11
கொரோனாத் தொற்றால் சவால்களை எதிர்கொள்ளும் இலங்கைக்கு, ரஷ்யா சார்பில் வழங்கப்படும் உதவிகளுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

ரஷ்யாவின் வெளிநாட்டு உறவுகள் அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ்வை, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டுள்ள அமைச்சர், ஸ்புட்னிக் வி தடுப்பூசி மற்றும் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு ரஷ்யா ஆதரவு வழங்கி வருகின்றது. சமகால உதவிகளை நன்றி தெரிவிக்கின்றோம் என்று தெரிவித்தார். (எ-4)

# கோவிட் தொற்றால் தம்பதி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 11
கொரோனாத் தொற்றால் வயோதிபத் தம்பதியினர் உயிரிழந்த சம்பவம் காலி ரிச்மன்டிகந்த பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான மனைவி, நிமோனியாப் பாதிப்பால் உயிரிழந்தார். அவர் உயிரிழந்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர், கணவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

மனைவி கடந்த மாதம் 20 ஆம் திகதி உயிரிழந்தார். அதனையடுத்து அவரது கணவர் மற்றும் மகன்,மருமகள் ஆகியோர் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் கடந்த 6ஆம் திகதி வெளியாகியிருந்தன.

மறுநாள் கணவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்கமடைந்து கீழே விழுந்து வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். அவரும் கொரோனாத்தொற்றால் நிமோனியா பாதிப்பு ஏற்பட்டே உயிரிழந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-4)



# பி.சி.ஆர். மாதிரிகளுடன் சென்ற அம்புயூலன்ஸ் விபத்து

கொழும்பு,ஜூன் 11
கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்திலிருந்து, பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகளை எடுத்துச் சென்ற அம்புயூலன்ஸ் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து களுத்துறை வஸ்கடுவ பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

மத்திய நிலையத்திலிருந்து, நாராஹேன்பிட்டியவில் உள்ள தனியார் மருத்துவமனை[illegible] திரிகள் கொண்டுசெல்லப்பட்டன.

விபத்துக்குள்ளான அம்புயூல[illegible] அப்பால் புரண்டு சென்றது என்[illegible] நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த அம்புயூலன்ஸின் சாரதி கலுபோவில மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# குருநாகல் நகர மேயர் விவகாரம்: செய்தியாளர்களிடம் விசாரணை

கொழும்பு, ஜூன் 11
குருநாகல் நகரசபை மேயரின் பிறந்தநாள் நிகழ்வுக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் இருவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயணக் கட்டுப்பாடுகளை மீறி பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றுக்கு, தனியார் தொலைக்காட்சியில் கடமையாற்றும், இரண்டு ஊடகவியலாளர்கள் சென்றுள்ளனர்.

மேயரின் பிறந்தநாள் நிகழ்வை குறித்த இரண்டு ஊடகவியலாளர்களும் வீடியோ எடுத்திருந்தனர். அவர்கள் அதனை தாம் பணியாற்றும் தொலைக்காட்சியிலும் வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை பிறந்தநாளைக் கொண்டாடிய குருநாகல் மேயர் துஷார சஞ்சீவ விதாரவின் மனைவி தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டிருந்த குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் திஸாநாயக்க, ஒழுக்காற்று நடவடிக்கைக்காக குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-4)

# கைது 27,977

கொழும்பு, ஜூன் 11
கொரோனாத் தொற்றுக்காலத்தில் நடைமுறையிலுள்ள சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 27 ஆயிரத்து 977 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். உரிய முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளைக் கடந்தமை மற்றும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டுக்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றும் ஆயிரத்து 57 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்துக்கு ஆதரவான தீர்மானம் தவறானது

## ஆட்சியைக் கவிழ்க்க ஒன்றுபடுமாறு எதிரணிக்கு அழைப்பு



**கொழும்பு,ஜூன் 11**

**சஜித்தின் தலைமைத்துவத்துக்கு நம்பிக்கை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியமை தவறான செயற்பாடாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இரண்டு மாதங்கள் விடுமுறையில் இருக்கின்றேன். அதனால் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தொடர்பில் சரியாகத் தெரியாது. சஜித்தான் எமது தலைவர். கட்சிக்குள் முரண்பாடும் இல்லாத போது, எதற்கு தலைமைத்துவத்துக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இது தவறான செயல். இது மக்கள் மத்தியில் வீண் அச்சத்தை உருவாக்கும். கூட்டத்தில் நான் பங்கேற்றிருந்தால், அது தொடர்பில் கேள்வி எழுப்பியிருப்பேன்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் இணையவுள்ளேன் என்று வெளியாகும் தகவல் உண்மையில்லை. என்னை அரசியலுக்கு அழைத்து வந்து அமைச்சரவை அந்தஸ்த்து உள்ள அமைச்சுப் பதவி வழங்கி, முதலமைச்சராக்கியது அவர்தான். அதனால் அவர்மீது இன்றளவிலும் மதிப்பு உள்ளது. இருந்தாலும் கட்சி தாவும் அரசியல் என்னிடம் கிடையாது. ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினோம். அந்தக் கட்சியுடன் பயணம் தொடரும்.

ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமெனில் எதிரணிகள் ஒன்றுபட வேண்டும். தனியே செல்லலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ நினைத்தால் அது தவறு- என்றார். (எ-4,44)

# மக்களின் ஆதரவு குறைவதால் ஊடகங்களை ஒடுக்க முயற்சி

## ஐ.தே.க. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 11

தற்போதைய அரசு மீது மக்களுக்கு இருக்கும் ஆதரவு வேகமாகக் குறைந்து வருவதால், மக்களின் கருத்துக்கள் வெளிப்படுவதைத் தடுப்பதற்காக ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களை அரசு ஒடுக்க முயல்கின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவிக்கையில்,

அரசு எதிர்த்தரப்பினரின் கருத்துக்களை மௌனமாக்க முயல்கின்றது.

ஊடகவியலாளர் மாநாடுகள் மூலமும், சமூக ஊடகங்கள் மூலமும் அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுபவர்களை சி.ஐ.டி. மூலம் விசாரணைக்கு அழைக்கின்றது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் மற்றும் அதன் மூலம் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக கருத்துக்கள் வெளியிட்டமைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டாளர் சி.ஐ. டிக்கு அழைக்கப்பட்டுள்ளார். இவ்வாறு கருத்துக்களைத் தெரிவிக்கும் மக்களை அரசு அச்சுறுத்துகின்றது.

மாற்றுக் கருத்து, மாற்றுச் சிந்தனை ஆகியவற்றால் அரசு அச்சமடைந்துள்ளது. எனவே மக்களின் தகவல் உரிமை மற்றும் கருத்துச் சுதந்திரத்தை அரசு உறுதி செய்ய வேண்டும் - என்றார். (எ-4)

# எதிர்க்கட்சியை பலவீனமாக்க ரணில் விக்ரமசிங்க ஆயுதமா?

## நளின் பண்டார விசனம்



கொழும்பு.ஜூன் 11

எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கு ரணில் விக்கிரம சிங்கவை ஆயுதமாகப் பயன்படுத்த அரசு முயலக் கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றுக்குள் நுழைவது தொடர்பில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே அதிகம் பேசுகின்றார்.

பெருமளவு நெருக்கடியில் சிக்குண்டுள்ள அரசு அதிலிருந்து விடுபடுவதற்காக ரணில் விக்கிரம சிங்கவை அமைச்சரவையில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடும்.

அல்லது ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றுக்கு வந்த பின்னர் எதிர்க்கட்சி இரண்டாகும் என்று கற்பனை செய்யக்கூடும்.

அதிகாரத்தை இழக்கும்போது இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுவது வழமை.

எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தி தன்னுடைய நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பயன்படுத்தலாம் என்பதே அரசின் திட்டம்.

**ரணில் விக்கிரமசிங்கவை அரசு தனது பக்கம் எடுப்பது குறித்து ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அவர் அனுபவம் உள்ள அரசியல்வாதி. அவருக்கு தனிப்பட்ட இராஜதந்திரத் தொடர்புகள் உள்ளன. ஆனாலும் எதிர்க்கட்சி பலவீனப்படாது - என்றார்.** (எ-4)

# அதிர்ஷ்டம் இருந்தால் நாமல் பிரதமராவார்!

## சுசில் ஆருடம்

நாட்டின் பிரதமராகும் அதிர்ஷ்டம் இருந்தால், அமைச்சர் நாமல் ராஜபக்சவுக்கு அந்தப் பதவி கிடைக்கும் என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையிலுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாமல் ராஜபக்ச, இரண்டாவது தடவையாகவும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதிகூடிய வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டவர். அவருக்கு சிறந்த கல்வித் தகைமைகள் உள்ளன. எந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு அதிர்ஷ்டம் கிட்டும் என்று கூறமுடியாது.

சிலருக்கு அதிர்ஷ்டம் இருக்கின்றது. தூரதிஷ்டத்தால் இன்னும் சிலர், அரசியலிலிருந்து வெளியேறியுள்ளனர் - என்றார். (எ-4)

# முன்னாள் எம்.பி புத்திக காலமானார்

கொழும்பு, ஜூன் 11

காலி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக குருகுலரத்ன தனது 77 ஆவது வயதில் காலமானார்.

அவரது பூதவுடல் பொரளை ஜயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று மாலை பொரளை மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவிதி சஜித்திடமே

## சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு.ஜூன் 11

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்காலம் சஜித் பிரேமதாசவின் நடவடிக்கைகளில் தங்கியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ரணில் விக்ரமசிங்க எதிர்கட்சித் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் யோசனை முன்வைக்கப்பட்டது. அதன்போது சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று நானே கடிதம் மூலம் கோரினேன்.

இன்று சஜித் பிரேமதாச எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் உள்ளார். நாம் ஒருபோதும் யார் மீதும் சேறு பூச செயற்படுவதில்லை. விமர்சனம் இருந்தால் அதனை நேருக்கு நேர் கூறுவோம்.

ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றம் வருவாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. 2019 ஆம் ஆண்டின் பின் நாம் அவருடன் கதைக்கவில்லை.

எமது சந்தர்ப்பத்துக்கு ஏற்ப 2019 ஆம் ஆண்டில் இருந்த சிறந்த



தெரிவு சஜித் பிரேமதாச தான். அதனால் நாம் அந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்தோம். தற்போது ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்காலத்தை சஜித்தின் நடவடிக்கைகளும், வேறு சில காரணங்களும் தீர்மானிக்கும் - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில் இருந்து குழந்தையின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு.ஜூன் 11


கிணற்றில் இருந்து நான்கு வயதுக் குழந்தை ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. நளீம் காபில் என்ற நான்கு வயதுக் குழந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் குடும்ப உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த குழந்தையின் உயிரிழப்பு தொடர்பில் நடைபெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் குழந்தையின் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்துள்ளார். (ஐ-150)





# திரிபடைந்த வைரஸ் காற்றாலும் பரவும்

### மருத்துவ நிபுணர் மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 11

கொரோனாத் தொற்றின் திரிபடைந்த வைரஸ் காற்றாலும் பரவும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் உறுதி செய்துள்ளது என்று கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நிலீகா மலவிகே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது திரிபடைந்த வைரஸ்க்கள் ஊடுருவியுள்ளதால், தொற்றிலிருந்து பாதுகாக்க, அனைவரும் எந்த நேரமும் முகக்கவசத்தை அணிந்திருப்பது கட்டாயம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-4)

## நீச்சல் தடாகத்தில் களியாட்டம்

கொழும்பு, ஜூன் 11

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி, கொள்ளுப்பிட்டியிலுள்ள சொகுசுமாடி குடியிருப்பொன்றின் மேல் மாடியிலுள்ள நீச்சல் தடாகத்துக்கு அருகில் களியாட்ட நிகழ்வை நடத்திய போது கைது செய்யப்பட்ட மூன்று பெண்கள் உட்பட 9 பேரையும் 14 நாள்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்துமாறு கோட்டை நீதிவான் உத்தரவிட்டார். கைதுசெய்யப்பட்ட 9 பேரில் 3 பேர் வெளிநாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5,இ)



## அடுத்த வாரம் டெங்கு அபாயம்

கொழும்பு, ஜூன் 11

அடுத்த வாரம் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல இடங்களில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் டெங்கு பரவும். குறிப்பாக கொழும்பு மாவட்டம் அதிக அச்சுறுத்தல்மிக்க பகுதியாகக் காணப்படுகின்றது. கம்பஹா, களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல் மற்றும் கண்டி மாவட்டங்களிலும் டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## மருத்துவமனைக் குளியலறைக்குள் பெருந்தொகை மருந்துக்குப்பிகள்

### தென்னிலங்கையில் பரபரப்பு

கொழும்பு,ஜூன் 11

அஸ்ராஜெனகா தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், கம்பஹா வத்துப்பிட்டிவல மருத்துவமனையின் குளியலறையில் இருந்து வெற்று மருந்துக்குப்பிகள் கைப்பற்றப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த மருத்துவமனையில் மருத்துவர்களைத் தவிர சுகாதார ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அஸ்ராஜெனகா தடுப்பூசியின் இரண்டாம் டோஸ் ஏற்றப்படவில்லை. அதனால் அங்கு நேற்றுமுன்தினம் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

முதல் கட்டம் வழங்கப்பட்ட 22 மருந்துக்குப்பிகளை தமது குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்றுவதற்கு மருத்துவமனை அதிகாரிகள் உடன்பட்டிருந்தனர் என்று மருத்துவமனை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே அந்தத் தடுப்பூசிகளை அவசரமாக எடுத்துச் செல்வதற்கு சுகாதார அமைச்சு முயற்சித்துள்ளது.

இதேவேளை மருத்துவமனையின் குளியலறையில் இருந்து ஏராளமான வெற்று மருந்துக்குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனினும் குறித்த குப்பிகள் முதல் டோஸுக்குரிய கழிவுகள் என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்துள்ளது. இதேவேளை, காலி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிராந்திய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் பிரதானி ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தடுப்பூசி வழங்கும் விவகாரத்தில் முறைகேடாகச் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (எ-4)



## மக்களைத் தேடிச்சென்று சுகாதாரப் பொருள்கள் கையளிப்பு

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை முன்மாதிரி*

கிளிநொச்சி, ஜூன் 11

கொரோனாத் தொற்றுநோயைத் தடுக்கும் வகையிலான சுகாதாரப் பொருள்கள், கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த மக்களுக்கு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையால் வழங்கப்பட்டு வருகின்றன. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மக்களுக்கு அந்தப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் முத்துக்குமார் கஜன், உறுப்பினர்களான ரமேஷ் மற்றும் வீரவாகுதேவர் ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை அந்தப் பொருள்களை வழங்கினர். (ப-13)





## 300 குடும்பங்களுக்கு உணவுப்பொருள்கள்

கிளிநொச்சி,ஜூன் 11

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட பளை, கண்டாவளை மற்றும் கரைச்சி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. தீவக அரிமாக் கழகத்தால் கொழும்பு வாழ் வர்த்தகர்களின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட லயன்ஸ் கழகம் இணைந்து இந்த உதவிப் பொருள்களை வழங்கின. (ஐ-13)

## வெளிநாடுகளிலிருந்து வருவோர் தடுப்பூசி ஏற்றினாலும் தனிமை


கொழும்பு.ஜூன் 11

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைதருபவர்கள், கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை செலுத்தி இருந்தாலும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். பரிசோதனை முடிவு வெளியாகும் வரை அவர்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு டோஸ் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கும் மீண்டும் தொற்று ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

அதனாலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின், தனிமைப்படுத்தல் பிரிவின், விசேட சமூக மருத்துவ நிபுணர் டில்ஹானி சமரசேகர தெரிவித்துள்ளார். (ஏ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கண்களின் அழகை பாதுகாக்க...?

ஆண் பெண் ஆகிய இருபாலாருடைய க்ண்களும் வறட்சி அடைய பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் பொதுவான காரணங்களாக, அதிகநேரம் கணிணி பார்ப்பதும், அதிக நேரம் படிப்பதுமே. ஆக உங்கள் கண்களில் ஏற்பட்டுள்ள வறட்சியை போக்கி கண்களை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும் என்பதை பார்ப்போம்.

1) மதுபானத்தை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.
2) புகைபாங பிடிப்பதை கைவிட வேண்டும்.
3) புகைப் பிடிப்பவர்களின் அருகில் கூட நிற்க வேண்டாம்.
4) கண் மருத்துவர் ஆலோசனையின் பெயரில் கண்ணுக்கான சொட்டுத் திரவம் பயன்படுத்தலாம்.
5) தேவையான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும்.
6) தேநீர் போன்றவற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.
7) கண் சொட்டு மருந்துகளும் தகுந்த மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
8) வெளியில் செல்லும் பொழுது கண்களை பாதுகாக்க, கறுப்பு கண்ணாடி அணிந்து கொள்ள வேண்டும்.
9) கண்களை சுத்தமாக வைத்திருங்கள்.
10) ஒன்றையே உற்று பார்க்காமல், அடிக்கடி கண்களை சிமிட்ட பழகுங்கள். அதாவது கண்களை மூடி, திறக்க பழகுங்கள்.
11) க்ண்டிப்பாக மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.
12) போதுமானளவு தூங்க வேண்டும்

# தினமும் 'மேக்கப்' போடுவதால் ஏற்படும் பிரச்சினைகள்

பெண்கள் தங்கள் அழகை மேம்படுத்த ஒவ்வொரு நாளும் முகத்தில் ஒப்பனை போடுவார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் மேக்கப் அணிவது நல்லதா அல்லது கெட்டதா என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?
இப்போது, இது ஒவ்வொரு நாளும் உங்கள் முகத்தில் ஒப்பனை பயன்படுத்துவதன் மூலம் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்கள்

**தோல் ஒவ்வாமை**
சருமத்தின் ஈரப்பதத்தை அதிகரிக்க நாம் ஒவ்வொரு நாளும் மாய்ஸ் சரைசர்களைப் பயன்படுத்துகிறோம். இருப்பினும், இவை நீண்ட நாள்கள் பயன்பாட்டில் இருப்பதால், அதில் உள்ள இரசாயனங்கள் சருமத்தில் அரிப்பு மற்றும் கருமை போன்ற தோல் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

**மூளை பாதிப்பு மற்றும் நடத்தை கோளாறுகள்**
லிப்ஸ்டிக்கில் ஈயம், காட்மியம், குரோமியம் மற்றும் அலுமினியம் போன்ற பொருள்கள் உள்ளன. இத்தகைய உதட்டுச் சாயங்களை தவறாமல் பயன்படுத்துவதால் வயிற்றுக்குள் சென்று மூளை பாதிப்பு மற்றும் நடத்தை கோளாறுகள் ஏற்படலாம்.

**சிறுநீரக பிரச்சினைகள்**
கிரீம், சோப் மற்றும் வொடி லோஷனை தினமும் தடவினால் உங்கள் சருமம் ஆரோக்கியமாக இருக்கும். ஆனால் அதில் உள்ள இரசாயனங்கள் மிகவும் மோசமான விளைவை ஏற்படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியுமா? உதாரணமாக, சில ப்ளீச்சிங் கிரீம்களில் பாதரசம் அதிகம். இவை சிறுநீரகங்களையும் நரம்புகளையும் பாதிக்கும்.

**சுவாச பிரச்சினைகள்**
முகத்துக்கு போடும் பவுடரில் உள்ள தாதுக்களை தொடர்ந்து உள்ளிழுப்பது குறிப்பிடத்தக்க நுரையீரல் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, அதிக மணம் கொண்ட பவுடரை பயன்படுத்த வேண்டாம். இது தலைவலி மற்றும் சுவாசப் பிரச்சனைகளையும் ஏற்படுத்துகிறது.

**புற்றுநோய்**
ஷேவிங் கிரீம்கள் மற்றும் மாய்ஸ்சரைசர்களில் பாதுகாக்கும் பாரஃபின் உள்ளது. எனவே, இவற்றின் வழக்கமான பயன்பாடு மார்பக புற்றுநோயின் அபாயத்தை அதிகரிக்கிறது. கூடுதலாக, தோல் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் உள்ளது.

**வயதான தோற்றம்**
மாய்ஸ்சரைசர்கள் மற்றும் ஸ்கின் க்ரீம்களை நீண்ட நேரம் பயன்படுத்துவதால் சருமம் சுருக்கமாகவும் விரைவாக வயதாகி விடும்.

# வீட்டுக் குறிப்புக்கள்



- வெந்தயக் குழம்பு கொதிக்கும்போது 2 உழுந்து அப்பளங்களைப் பொரித்து நொறுக்கிப் போட்டு குழம்பை இறக்கினால் குழம்பு தனி ருசியாக இருக்கும்.
- வாழைப்பழத்தை தோல் உரித்து துண்டுகளாக்கி விளக்கெண்ணெய்யில்(ஆமணக்கு எண்ணெய்) ஊறப்போட்டு தினம் 2 துண்டுகள் தூங்கப்போகும் முன் சாப்பிட்டு வந்தால் உடல் உஷ்ணம் குறைவதுடன் மலச்சிக்கலுக்கும் தீர்வு கிடைக்கும்.
- பூரி நன்றாக பொங்க வேண்டுமானால் கொஞசம் சக்கரையும் 1 ஸ்பூன் எலுமிச்சைம்பழத்தையும் சேர்த்து மாவை குழைத்து செய்தால் பொங்குவதோடு மிருதுவாகவும் இருக்கும்.
- அப்பத்துக்கு அரைக்கும்போது பச்சரிசியை வெந்நீரில் நனைத்து அரைத்தால் அப்பம் மொறுமொறுப்பாக இருக்கும்.
- இட்லிக்கு அரைத்த மாவில் 2 ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டு கரைத்த பின் புளிக்க வைத்தால் இட்லி மிருதுவாக வரும்.
- நூடில்ஸ் ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருக்க அதனை வேக வைக்கும்போது ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு வேகவிடவும்.

# எப்போதும் மவுசு குறையாத கொட்டன் சேட்டுகள்

கடினமான வேலை செய்வோர், வெய்யிலில் அலைவோர் எல்லோருக்கும் கொட்டன் சட்டை ஒரு வரப்பிரசாதம். ஆண்கள் அணியும் ஆடைகளில் மிகப் பெரும்பான்மை வகிப்பது சட்டைகளே. அதில் அலுவலகம் போன்ற வேலை நிமித்தமாக செல்லும் இடங்களுக்கு போர்மல்ஸ் என்றும், குடும்பத்துடன் வெளி இடங்களுக்கு செல்லும்போதும், நண்பர்களுடன் வெளியே செல்லும்போதும் அணிவதற்கு கேஷ்வல்ஸ் என்றும் தனித்தனி ரகங்கள் இருக்கின்றன. பொதுவாக கொட்டன் சட்டைகள் என்றால் வெய்யில் காலத்தில் உடலுக்கு ஏற்றது என்று சொல்வார்கள்.

உண்மையில் கொட்டன் வெயிலுக்கும் மட்டும் அல்ல எல்லாவிதமான பருவநிலைக்கும் ஏற்ற ஆடை என்பதுதான் உண்மை. வெய்யில் வெளிச்சூட்டை உடலுக்கு அனுப்பாமல் தடுத்து குளிர்ச்சியை தரும் கொட்டன், மழைக்காலங்களிலும், குளிர்க்காலங்களிலும், உடல் சூட்டை தக்கவைத்து ஒரு கதகதப்பை தரும் என்பது இதன் தனிச்சிறப்பு எனலாம்.
எளிமையும் கம்பீரமும் ஒரு சேர கிடைப்பது கொட்டன் சட்டைகளிடம்தான். கொட்டன் துணியின் தன்மைகளில் மிகவும் முக்கியமானதும் பயன் தரக்கூடியதுமான ஒரு அம்சம் அதன் ஈரம் உறிஞ்சும் தன்மைதான்.
சிலருக்கும் மிகவும் வெப்பமான சருமம் இருக்கும். அம்மாதிரியானவர்கள், உடலுக்கு உடுத்தும் ஆடைத் தேர்வில் மிகவும் கவனமாக இருத்தல் அவசியம். ஏனென்றால் சில ஆடைகள் உடலுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தி தோல் வியாதியில் கொண்டு போய் விட்டுவிடும். ஆனால் கொட்டன் ஆடைகளை பொருத்த அளவில் இந்த பிரச்சனை இல்லை. கொட்டன் மிகவும் பாதுகாப்பானது.
எனவே கொட்டன் ஆடைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, நமது உடலுக்கு மதிப்பே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு – 20.08.1926 உதிர்வு – 23.05.2020

**திருமதி பவளம் இராசா**

திதி – வைகாசி மாத பூர்வபட்ச பிரதமை
11.06.2021

ஐவரை ஆண்பிள்ளைகளாய்ப் பெற்றெடுத்து
அன்போடு அறிவினையும் ஊட்டி வளர்த்து
தெய்வத்தின் அருளோடு உயர்பதவிகளும் பெறவைத்து
தேவைகள் யாவையுமே நிறைவு செய்து எம்மை
உயர் நிலையில் வைத்த தாயே!
உன்னத குணங்கள் கொண்டவரே
உமதுயிரைக் காலனவன் கவர்ந்ததினால்
நிலை குலைந்துவிட்டோமே!

உம்மை இழந்து ஆண்டொன்று போயிடினும்
மெய்யாய் எம் மனங்களிலே நிலைத்தே இருப்பாயே
மேலான உம்தாத்ம சாந்திக்காக நாமும்
கைகூப்பி அஞ்சலித்து நிற்கின்றோமே.

59/2, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி
கிழக்கு, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவைக் கணமும் மறவாத
**பிள்ளைகளும், குடும்பத்தினரும்.**

# சுகாதாரத் துறைசார் தொழிற்சங்கங்கள் பணிப் புறக்கணிப்பு

## இன்று காலை முதல் நண்பகல் வரை

கொழும்பு, ஜூன் 11

சுகாதார சேவையாளர் சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன. இந்தப் பணிப் புறக்கணிப்பானது, காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

போதுமான சுகாதாரப் பாதுகாப்பு உடைகள், முகக்கவசம், கையுறைகள் மற்றும் தொடர்ச்சியாகப் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கான உணவு ஆகியவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து மேற்படி பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. இருப்பினும், கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் மற்றும் 15 சிறுவர் மருத்துவமனைகள் ஆகியவற்றிலுள்ள சுகாதார சேவையாளர்கள் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதில்லை என சுகாதார சேவையா ளர்கள் சங்கங்கள் அறிவித்துள்ளன.

அரச கதிரியக்க மற்றும் தொழிநுட்வியலாளர்கள் சங்கம், குடும்ப நல சுகாதார சேவை சங்கம் மற்றும் அரச தாதியர் சங் கம் உள்ளிட்ட சுகா தாரத் துறைசார் 26 தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்பகிஷ் கரிப்பில் ஈடுபடவுள் ளன. (ம-22)

## தேவை

J.C.P. ஒப்பரேட்டர் தேவை.

தொடர்பு: 0773514753

## மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு
## விலைக்கேள்விக்கான கோரல் - 2021

1. வடக்கு மாகாண மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவுற்காக, பிராந்திய பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான மற்றும் தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து குறியீடுசெய்யப்பட்ட விலைக்கேள்வியினைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசியபோட்டிவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்,
3. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் (021 2061423) மாவட்ட பொது வைத்தியசாலையில் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டண மாக **ரூபா 2000/=** காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **11.06.2021** தொடக்கம் **24.06.2021** வரையான காலப்பகுதியில் **09.00** மணி தொடக்கம் **15.00** மணிவரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் **25.06.2021 ஆந்** திகதி **9.00** மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ மாவட்டபொது வைத்தியசாலை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் **25.06.2021** ஆம் திகதி **09..30** மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்
7. முன்னாயத்த விலைகூறல் தொடர்பான ஒன்றுகூடல் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் **18.06.2021** ஆம் திகதி **9.00** மணிக்கு நடைபெறும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணைவிபரம். | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| DGH/Mu/ PSDG/ 2021/02 | **EXTENSION OF THEATRE AT DGH, MULLAITIVU** | 5.84 | 109 Days | C6 or C7 | 59,000.00 | 09.10.2021 வரை |

**வைத்திய கலாநிதி. N.Umashankar**
தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு.
மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு.

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி நளினா கண்ணன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.சரவணை மகேந்திரம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்தித்து
நிற்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி**
**இளவாலை.**

## 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
**23.10.1926**

**மறைவு**
**22.05.1993**

**அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை**

**(விவசாய நண்பன், கைதடி கிழக்கு கைதடி)**

எம் வம்சத்தின் தந்தையே....
இல்லாள் அரவணைப்பே
அப்பா எனும் ஆண்டவரே.
மருமக்களை தன் பிள்ளைகளென
வாழ்த்திய அன்புத் தந்தையே.
பணிவு, துணிவு, கனிவு என்பதை
எமக்கு கற்றுக்கொடுத்த பேரனே.
பூட்டனைக் கண்டு பூரிப்பாய் எம்முடன் வாழாமல்
இறைவன் தன்னடி அழைத்ததேன்?
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் வாழ்ந்த நீங்கள்
எமை விட்டு விலகாது என்றும் எம்முடன் வாழ்வீர்.

**மனைவி - திருமதி சடப்பிள்ளை சங்கரப்பிள்ளை**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 21.07.1951



இறப்பு 10.06.2021

## வைத்திய கலாநிதி
## லயன் கந்தையா இராஜரெட்ணம்
**(இரட்ணம் வைத்தியசாலை)**

சங்கரத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியகலாநிதி கந்தையா இராஜரெட்ணம் அவர்கள் நேற்று (10.06.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இலஷ்மி ஆகியோரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான றோமபாலா அமலோற்பவம் தம்பதியரின் மருமகனும், வைத்திய கலாநிதி றோஸ் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான இராசமணி, மருதபிள்ளை மற்றும் இரத்தினதேவி, சின்னத் துரை (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், றஜனிகாந்த், றஜீபா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை), றஜனியா (பிரதி முகாமை யாளர் - மக்கள் வங்கி, யாழ் ஸ்ரான்லி வீதி கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனோஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப் பாணம்), வைத்திய கலாநிதி ஜூட்குயின்ரெஸ் தர்ஷனோதயன் (இந்தியா), றெஜீவன் (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி சுன்னாகம் கிளை) ஆகி யோரின் மாமனாரும், அகிஷன், றெஷோன், அபிரன், றெஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் இன்று (11.06.2021) வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**129, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**T.P: 021 222 2726**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 03.05.1939



மறைவு 10.06.2021

## நாகலிங்கம் வேதநாயகி

சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி (மடத்தடி) யை பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட நாகலிங்கம் வேதநாயகி நேற்று (10.06.2021) வியாழக் கிழமை காலமானார்.


அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான R.T. சுப்பிரமணியம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், பொன்னர் நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிறேம்குமார் மற்றும் சந்திரலதா (கனடா), புஷ்பகலா (லண்டன்), ஜானககுமார் (ஆசிரியர், யா/வரணி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் குமாரமூர்த்தி (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுமதி (நோர்வே), முத்துலிங்கம் (கனடா), சிவனேசன் (லண்டன்), மலர்விழி (RDHS Jaffna) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற திலிபன் மற்றும் முரளி (நோர்வே), கம்சிகா (நோர்வே), மயூரன் (கனடா), சியாம் (லண்டன்), சோபிதா (லண்டன்), ஜீவிகா, ஜயனிகா (மாணவிகள், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2021) வெள்ளிக்கிழமை அன்னா ரின் இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரிஸ்யக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6147 362**

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் நடராசா
**(ஓய்வு பெற்ற ஆசிரியர், சிவ கீத அடியார்)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியர், பிரபல பண்ணிசை வித்தகர் வல்லிபுரம் நடராசா அவர்கள் நேற்று (10.06. 2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் செல்வராணி அவர்களின் அன்புக் கணவரும், அமரர்களான தம்பிப் பிள்ளை, கந்தையா (மணியம் மாஸ்டர், ஓய்வுபெற்ற முன்னாள் போதனாசிரியர் - யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), பரமசாமி (ஓய்வுபெற்ற முன்னாள் இசை ஆசிரியர்), அன்னலட்சுமி, தர்மலிங்கம், ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கமலநாதன் (முன்னாள் ஆசிரியர் சென்.ஜோன்ஸ் கல்லூரி), காலஞ்சென்ற நவ ரட்ணராஜா (பொறியிய ளிாளர், நோர்வே), கணேசமூர்த்தி, சிவசோதி, ரமணி, சசிகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுஷியா, சத்தியா, சிவலஜனி, கருணைராஜன் பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், கமலன், பாமினி, தூயவன், பூரணி, டிலானி லாவண்யா, இராகவன், சுகன்யா, சாங்கர், சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேரனும், சிவப்பிரகாசம், பொன்னுத்துரை, காலஞ்சென்ற இராஜலட்சுமி, கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.06.2021) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அரியாலையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**106, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6305 002**

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் கோபாலசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கோபாலசிங்கம் கடந்த (08.06.2021) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - யோகம்மா தம்பதி யரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான நடராஜா - மங்கையர்கரசி தம்பதியரின் மருமகனும், நீலாம்பிகையின் பாசமிகு கணவரும், ராதிகா, சுரேக்கா, பாலகுமாரின் அன்புத் தந்தையும், ஜெகன், துஷ்யந்தன், மேனுஜா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான நேசலக்சுமி, பத்மாவதி மற்றும் கமலாவதி, சகுந்தலாதேவி, இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரனும், தேவாம்பிகை, இராமச்சந்திரன், பாலச்சந்திரன், வேதாம்பிகை, செல்வச்சந்திரன், விமலச்சந்திரன், யசோதாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், பவன், லிவ்வியா, ரேந்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

**இல.11, சங்கிலியன் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**
**T.P: 021 221 9439**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## பயணத் தடை...

நாட்டில் கொரோனாத் தொற்றின் தீவிரத்தையடுத்து கடந்த மே 21ஆம் திகதி தொடக்கம் இலங்கை முழுவதும் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டது. அதனை ஜூன் 14ஆம் திகதி தளர்த்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. இந்நிலையில், எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் பயணக் கட்டுப்பாடு தொடரும் என்று செய்திகள் வெளியாகிவரும் நிலையிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னர் நீடிப்பது தொடர்பாக இதுவரையில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்படும் எனத் தற்போது தெரிவிக்கப்படும் தகவல் பொய்யானது. பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 14ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் பட்சத்தில் அதனை ஊடகங்கள் வாயிலாக அறிவிப்போம் - என்றார்.

அதேநேரம், நீடித்த பயணத்தடை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் இருந்ததுபோன்று, இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணிவரை பயணத்தடை மீண்டும் விதிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம-22)

## பட்டினிச்...

செலுத்த வேண்டும் இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'நாட்டை நாம் தொடர்ந்து முடக்கி வைத்திருந்தால் ஒரு பக்கம் கொரோனாவாலும், மறுபக்கம் பட்டினியாலும் மக்கள் நாள்தோறும் செத்துமடியும் நிலை ஏற்படும். அதனால்தான் எதிர்வரும் 14ஆம் திததிக்குப் பின்னர் பயணத் தடையை நீடிப்பது தொடர்பில் நாம் இன்னமும் முடிவெடுக்கவில்லை.

கொரோனாக் கொத்தணிகள் பிரதேசம் எங்கும் பரவலடைந்துவிட்டன. மக்களின் பொறுப்பற்ற செயல்களால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. எனவே, மக்களின் பாதுகாப்பு அவர்களின் கைகளிலேதான் தங்கியுள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மக்கள் தவறாது பின்பற்ற வேண்டும். கொரோனாத் தடுப்பு சுகாதார விதிகளை மக்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட்டால் கொரோனாவை இந்த நாட்டிலிருந்து விரைவில் விரட்டியடிக்க முடியும். அரசு மீது பழி சுமத்துவதால் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது. எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் நலன் தொடர்பிலும் நாட்டின் நன்மை குறித்தும் கருத்துக்களை வெளியிட வேண்டும்.

கொரோனாவை வைத்து அரசியல் நடத்துவதை அவர்கள் கைவிட வேண்டும்' என்றார். (ம-22)

## இம்மாத...

மாவட்டத்தில் முதலாவது டோஸ் தடுப்பூசி ஏற்றியவர்களுக்குரிய இரண்டாம் கட்டத் தடுப்பூசிகள் இந்த மாத இறுதியில் அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவிலிருந்து இதுவரை 31 லட்சம் சைனோஃபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகள் இலங்கைக்கு வந்துள்ளன. அவற்றில் முதல் வந்திருந்த 11 லட்சம் தடுப்பூசிகள் மக்களுக்கு ஏற்றப்பட்டன. இதில் 50 ஆயிரம் தடுப்பூசிகளை யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வழங்கியிருந்தோம். பின்னர் வந்திருந்த 10 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளை வடக்கு மாகாணத்துக்கு வெளியேயுள்ள மாவட்டங்கள் பலவற்றுக்கு தலா 50 ஆயிரம் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அவற்றை மக்களுக்கு ஏற்றும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் இறுதியாக வந்த 10 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளில் பெரும்பாலானவை இரண்டாம் டோஸுக்காகப் பயன்படுத்தப்படவுள்ளன. இவற்றில் அதிகமான தடுப்பூசிகள் மேல் மாகாணத்தில் முதல் டோஸ் பெற்ற மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இனிவரும் நாள்களிலும் சீனா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு தடுப்பூசிகள் வரவுள்ளன. அவற்றில் ஒரு தொகுதி யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கிலுள்ள மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இவ் வருடத்துக்குள் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி இலங்கையில் உள்ள அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கின்றது. அப்போதுதான் அடுத்த வருடத்துக்குள் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (ம-ஒ,5,22)

## வடக்கில்...

மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 104 பேருக்குத் தொற்று உறுதியானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்று 320 பேரின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 40 பேருக்குத் தொற்று உறுதியானது.

**யாழ்ப்பாணம்**

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தலா 37 பேருக்கும், காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 9 பேருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என 119 பேருக்குத் தொற்று உறுதியானது.

**கிளிநொச்சி**

மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என 3 பேருக்குத் தொற்று உறுதியானது.

**வவுனியா**

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேருக்கும், வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் என 23 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. (ம-ஒ,5)

## கொரோனா...

வல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 16 ஆயிரத்து 134 ஆக எகிறியுள்ளது.

மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 986ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 82 ஆயிரத்து 238ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

## பயணத்தடையை...

அதனை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. பயணக் கட்டுப்பாட்டை மீறி திறக்கப்பட்ட வர்த்தக நிலையங்களும் கடும் எச்சரிக்கையுடன் பூட்டப்பட்டன. (ம-20)

## தொழிலுக்கு...

பகுதியில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

44 வயதுடைய வேலு கணேஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். அவர் 5 பிள்ளைகளின் தந்தை. மோட்டார் சைக்கிளில் இருந்து வீழ்ந்த நிலையில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு பொலிஸார் இறப்புத் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

## மஸ்தான்...

ளப்பட்டது. இதன்போதே மஸ்தானுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-18)

## பொலிஸுக்கே..

பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் கிடைத்ததை அடுத்து, அவரைத் தொடர்புகொண்ட யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், தமக்கு வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளனர். இதையடுத்து மதுப் போத்தல்களைக் கைமாற்றுவதற்காக ஆறுகால்மடம் பகுதிக்கு குறித்த நபர் வரவழைக்கப்பட்டார். இதையடுத்து மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து 6 வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ம-26)

## பிறந்து...

தெரிவிக்கப்பட்டுள்ளது. புஸல்லாவ பகுதியைச் சேர்ந்த சிசு, கம்பளை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இந்த சிசு உயிரிழந்திருந்தாலும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இறப்புப் பதிவாகியுள்ளது. (ம-4,44)

# யூரோ கால்பந்தாட்டம் ஆரம்பமாகிறது இன்று



லிஸ்பன், ஜூன் 11

யூரோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று நள்ளிரவு 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துருக்கி மற்றும் இத்தாலி அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டத்துடன் தொடர் ஆரம்பமாகின்றது.

இந்தத் தொடரில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் போர்த்துக்கல் களமிறங்குகின்றது.

உலகச் சம்பியனான பிரான்ஸ் இந்த வருடம் யூரோ கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற பொதுவான அபிப்பிராயம் நிலவுகின்றது. கிரீஸ்மன், மப்பே, போக்பா என்று பலமான படை பணியுடன் பிரான்ஸ் இந்த வருடம் களம் காண்கின்றது. (ம)

# பி.சி.ஆர். மேற்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

சாவகச்சேரி, ஜூன் 11

பயணத் தடை காரணமாக அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோர் கட்டாயம் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பணிமனையில் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன்படி நேற்று வியாழக்கிழமை 22 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது. இவர்களின் மாதிரிகள் ஆய்வுக்காக யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணெய்க் கசிவு இருக்கிறது ஆனால் கப்பலில் இருந்தா என்று தெரியவில்லை

## இப்படிச் சொல்கிறார் கடற்படைப் பேச்சாளர்

**கொழும்பு, ஜூன் 11**

**எரிந்து சேதமடைந்த எம்வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அருகே மெல்லிய எண்ணெய் படலம் காணப்படுகின்றது. ஆனால் அது கப்பிலில் இருந்து வந்ததா என்பது தெரியவில்லை.**

இவ்வாறு கடற்படைப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு நேற்றுக் காலை தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி நிறுவனம் நேற்று முன்தினம் மாலை வெளியிட்ட செய்தி அறிக்கையில், எரிந்த பேர்ள் கப்பலின் அருகில் காணப்படும் கடற்பகுதியில் எண்ணெய் படலம் காணப்படுகிறது எனவும் அதற்கு ஆதாரமாக செய்மதி ஊடாக எடுக்கப்பட்ட ஒளிப்படங்களையும் வெளியிட்டிருந்தது.

சர்வதேச செய்தி ஊடகத்தின் மேற்படி குற்றச்சாட்டை மறுத்துள்ள கடற்படைப் பேச்சாளர், கப்பலுக்கு அருகில் எண்ணெய் படலம் காணப்படுவது உண்மையாயினும் அது கப்பலில் இருந்து ஏற்பட்ட எண்ணெய் கசிவா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. அதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் தேசிய நீர்வாழ் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஈடுபட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (ஒ.5,இ)

# தீப்பற்றிய பேர்ள் கப்பலில் எண்ணெய் கசியவில்லை

### இராஜாங்க அமைச்சர் மறுப்பு

கொழும்பு, ஜூன் 11

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் பெருமளவிலான எண்ணெய்க் கசிவு ஏற்பட்டது என்று சர்வதேச செய்திச் சேவை, வெளியிட்டுள்ள தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று இராஜாங்க அமைச்சர் நாலக்கே கொடஹேவா தெரிவித்துள்ளார். கடலில் மூழ்கும் கப்பலுக்கு அருகில் இலங்கைக் கடற்படையினர் மற்றும் இந்தியக் கடலோர பாதுகாப்புப் படையினர் ஆகியோர் கண்காணிப்பில் உள்ளனர். அவர்கள் கசிவு தொடர்பான எந்தவித தகவல்களையும் இதுவரை அறிவிக்கவில்லை.

எனினும் இதனை உறுதிப்படுத்த கப்பல் மூழ்கும் இடத்துக்கு விசேட சுற்றுச்சூழல் ஆய்வாளர்களை அனுப்புவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த கப்பலில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது என்று கடல்சார் மாசுபாட்டைக் கண்காணிக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# விலங்குகளின் பிறப்பு இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு,ஜூன் 11

இலங்கையில் வனவிலங்கு சரணாலயங்களில் விலங்குகளின் பிறப்பு 25 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று தேசிய விலங்கியல் தோட்டத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக சரணாலயங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை நிறுத்தப்பட்டது. அதனால் விலங்குகள் சுதந்திரமாகவும், மன அழுத்தமின்றியும் வாழ்வதால் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளது. இந்தக் காலத்தில், இதற்கு முன் நாட்டில் பிரசவிக்காத விலங்குகளும் குட்டிகளை ஈன்றுள்ளன என்று தேசிய விலங்கியல் தோட்டத் திணைக்களப் பணிப்பாளர் இஷானி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (எ-4)

# மாணவர்கள் மீது துர்நடத்தை அதிபர் கைது

கொழும்பு, ஜூன் 11

நான்கு ஆண் மாணவர்களை பாலியல் துஷ்பிரயோ கத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் திருமணமாகாத 43 வயதுடைய அதிபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பொதுபிட்டிய இறக்குவானைப் பகுதியில் நடந்துள்ளது.

11 தொடக்கம் 13 வயதுக்கிடைப்பட்ட குறித்த மாணவர்கள்மீது சந்தேகமடைந்த பெற்றோர், பொலிஸாரிடம் முறையிட் டுள்ளனர். இதனையடுத்து அவர்களிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அதிபர் தம்மை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். பாடசாலை மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக கஹவட்ட ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறக்குவானைப் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)

# பேர்ள் கப்பலில் எண்ணெய் கசிவு

### உறுதிப்படுத்தியது அறிக்கை



கொழும்பு, ஜூன் 11

கொழும்பு துறைமுகத்திலிருந்து 9.5 கடல் மைல் தொலைவில் தீப்பிடித்துள்ள எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளதை, கடல்சார் மாசுபாட்டைக் கண்காணிக்கும் கடல் மாசு கண்காணிப்பு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

கடல் பகுதிகளில் காலநிலை மாற்றத்தைக் கண்காணிக்கவும் அவற்றை நிர்வகிக்கவும் பயன்படுத்தப்படும் சில செயற்கைக்கோள் படங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சுமார் மூன்று கிலோமீற்றர் பரப்பளவில் எண்ணெய் பரவியுள்ளது. காற்றின் வேகம் அதிகரிக்கும் போது இது மேலும் பரவக்கூடும்.

கப்பல் அமைந்துள்ள பகுதியைச் சுற்றி சுமார் 12 கடல் மைல் வரை இந்த எண்ணெய் பரவக்கூடும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் 300 மெற்றிக்தொன் மசகு எண்ணெய் கப்பலில் இருந்தது என்று தகவல் வெளிவந்திருந்தன.

எண்ணெய் பரவ ஆரம்பித்தால், இரசாயனம் மூலம் அதனைக் கட்டுப்படுத்தும் திட்டம் உள்ளது. காலநிலை காரணமாக அதனைச் செய்ய முடியாமல் போனால், கடற்கரையைச் சுத்தம் செய்ய நேரிடும் என்று சமுத்திர சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹதபுர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)




# எதிர்கொள்ளத் தயார்

கொழும்பு, ஜூன் 11

கப்பலிலிருந்து எண்ணெய் கசிவு ஏற்படுமாக இருந்தால் அதனை எதிர்கொள்வதற்குத் தயாராக உள்ளோம் என கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. கப்பலைச் சுற்றி எண்ணெய் ஏற்றும் கொள்கலன்கள் நிறுத்தப்படும். அதனைவிட எண்ணெய் கசிவு ஏற்பட்டு பரவலடைவதைத் தடுக்கும் வகையில் இரசாயனப் பரவல்களும் காற்றிலிருந்து தூவப்படும் என்று அதன் தலைவர் தர்ஷானி லஹந்தபுர தெரிவித்துள்ளார். (ஒ.5,இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.